அசல் வழக்கு எண் : 49/2023

நாள் : 21.08.2025

வா.சா. : 1

பெயர் : பாத்திமா நாச்சியா

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

கிரய பத்திரத்தில் ஜாமினுக்காக சொத்து கொடுக்கப்படுவதாக எழுதப்படவில்லை. எழுதியதாக என்னிடம் சொன்னார்கள் ஆனால் அதில் இல்லை. கிரய பத்திரத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டோம். நெருக்கடி கொடுத்ததால் கையெழுத்து போட்டோம். வழக்குரையில் நெருக்கடியில் கொடுத்ததால் தான் கையெழுத்து போட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சாட்சி வக்கீலிடம் சொன்னேன் என்கிறார். வழக்குரையில் தாவா அ பட்டியல் சொத்தை கடன் தீரும் வரை வாதி அனுபவித்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் கிரய பத்திரத்தில் எழுதப்படவில்லை. என், என் கணவரின் ஆதார் கணவரின் பேன் கார்டு, ஓட்டுநர் உரிமம் ஆகியவை கிரய ஆவணத்திற்கு முன்பே பெறப்பட்டது என்றால் சரியதான். வாசாஆ 8 அவணமான பாஸ்போர்ட் இந்த முகவரியில் தான் பெறப்பட்டுள்ளது. கிரயத்திற்கு முன்பு இதே முகவரியில் இருந்ததால் அதை காட்டி ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிடை சொத்தில் என் அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய வசம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான வீட்டுவரியை பிரதிவாதி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. சரவணன் 2021 ல் வீட்டை விற்கபோவதான் என்னிடம் வந்து சொன்னார். அதனால் தான் அவர் மீது வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்தை யாருமே வாங்க முன்வந்ததாக வழக்குரையில்

Abthima Nachiya 21/8/25

சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவர்களின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை. வழக்கிடை சொத்தை விற்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றாலும் அவர் அவ்வாறு விற்க முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி விற்க போவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு கடன் தொல்லை அதிகம் என்றால் சரிதான். சுமார் ஒரு கோடி வரை கடன் உள்ளது. கடன் தொல்லை இருப்தால் வீட்டில் இருக்கவேண்டாமென்றும் வெளிநாடு போய் பணம் அனுப்புங்கள் நான் கடனை அடைக்கிறேன் என்று 2018ம் ஆண்டு என் கணவரை அனுப்பி வைத்துவிட்டேன். 2021ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக ஒரு முறை வந்து சென்றார். பிரதிவாதிக்கும் பிரகாஷ் இரும்புக்கடைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் பிரகாஷ் இரும்பு கடையில் வாங்கிய கடனுக்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தகுந்த பிரதிபிரயோஜனத்திற்கு எவ்வித வில்லங்கமும் இல்லாமல் தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. பிரகாஷ் இரும்புக்கடைக்கு எவ்வளவு கடன் தொகை கொடுக்கவேண்டுமென்று சரியான தொகை விவரம் தெரியாது என்றால் 11 லட்சம் என்று தெரியும். 10லட்சத்திற்கு அதிகம் என்று சொன்னார்கள் ஆனால் சரியான தொகை தெரியாததால் 11 லட்சம் என்று வழக்கில் சொல்லியுள்ளோம். இந்த வழக்கை பிரகாஷ் இரும்பு கடை மீது தான் தாக்கல் செய்யவேண்டுமென்றாலும் சரவணன் மீது தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. முறையாக சொத்தை மதிப்பிடாமல் தவறான சட்டபிரிவின் கீழ் முத்திரைக்கட்டணம் செலுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரிவு 58 சி சொத்துரிமை மாற்று சட்டத்தின் கீழ் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

21/8/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

21/8/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை